# இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கை சபை

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

SLCARP

# வெற்றிடங்கள்

**இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கை சபைக்காக கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்வாய்ப்பு பிரிவுகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (கொழும்பு தலைமை அலுவலகத்தில் உள்ள அனைத்து வெற்றிடங்கள்)**

**(1) சிரேஷ்ட விஞ்ஞானி – (HM 1-1) (வெற்றிடங்கள் எண்ணிக்கை – 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம் மற்றும் விவசாயத் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக அமைப்பு ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் அனுபவத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமை (முதுமாணி).

**அல்லது**

குறித்த துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் சிரேஷ்ட ஆய்வு அதிகாரி ஒருவராக குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**உள்வாரி**

பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம் அல்லது விவசாயத்தில் ஒரு பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் 02 ஆண்டுகள் பட்டம் பெற்ற பின்னரான ஆய்வு பட்டம்.

**மற்றும்**

குறித்த துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் சிரேஷ்ட ஆய்வு அதிகாரி ஒருவராக குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**அல்லது**

சிரேஷ்ட கல்விசார் மற்றும் ஆய்வுப் பிரிவில் “சிரேஷ்ட ஆய்வு அதிகாரி” பதவி ஒன்றில் குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

குறிப்பு: குறித்த துறையில் தொடர்புடைய ஆய்வு வெளியீடுகள் கூடுதல் தகைமை ஒன்றாக அமையும்.

**பணியாளர் பிரிவின் சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு**

*** HM 1-1-2025 [ரூபா 140,640 - 15 x 4,100–Rs.202, 140]**

(01/2025 முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்)

வயது: 35 வயதுக்குக் குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**(2) ஆய்வு அதிகாரி – (AR – 1) (வெற்றிடங்கள் எண்ணிக்கை – 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம் அல்லது விவசாயத்தில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு ஒன்றுடன் நான்கு ஆண்டு காலத்தின் சிறப்பு பட்டம் ஒன்று.

**அல்லது**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம் அல்லது விவசாயத்தில் இரண்டாம் வகுப்பு கீழ்நிலை ஒன்றுடன் நான்கு ஆண்டு காலத்தின் சிறப்பு பட்டம் ஒன்று மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓர் ஆண்டு ஆராய்ச்சி பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**அல்லது**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம் அல்லது விவசாயத்தில் பட்டம் ஒன்று மற்றும் தொடர்புடைய துறையில் இரண்டு (02) ஆண்டுகள் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி பட்டம் ஒன்று.

**பணியாளர் பிரிவின் சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு**

*** AR 1-2025 ரூபா [91,650 – 10x2,480-15 x 3,450- Rs.168,200]**

(01/2025 முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்)

வயது: இருபத்து ஐந்து (25) வயதுக்குக் குறையாதவராகவும் நாற்பத்து ஐந்து 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**(3) முகாமைத்துவ உதவியாளர் – (MA 1 – 1) (வெற்றிடங்கள் எண்ணிக்கை – 06)**

**தகைமைகள் (பொதுவானது):**

**உள்ளக அபேட்சகர்கள்**

**கல்வி:**

a) க.பொ.த. (சா/த) பரீட்சையில்

i. சிங்களம்/ தமிழ்

ii. ஆங்கில மொழி

iii. கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சையை விட) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக அபேட்சகர்கள்**

ஆரம்ப நிலை பணியாளர்கள் - தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப நிலை – பின்வரும் தகைமைகளை பெற்ற தேர்ச்சி பெறாதவர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

**கல்வி:**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் i. சிங்களம்/ தமிழ், ii ஆங்கில மொழி, iii. கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

**மற்றும்:**

மேலுள்ள பணியாளர் பிரிவுகளின் கீழ் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தல் வேண்டும்.

குறிப்பு: நிரந்தர பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன் செய்த எந்தவொரு சேவைக் காலமும் அல்லது எந்தப் பதவிக்கும் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கான முன் நிபந்தனையாக பயிற்சி காலத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய சேவைக் காலமும், மேலே குறிப்பிடப்பட்ட தகுதிக்கான ஐந்து ஆண்டுகள் சேவைக் காலத்தில் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. அமய/ தற்காலிக அடிப்படையிலான எந்தவொரு சேவைக் காலமும் கூட இந்த நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**பணியாளர் பிரிவின் சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு**

*** MA 1-1-2025 [ரூபா 46,220 - 10 x 540 - 7 x 630 – 4 x 890 - 20 x 1,190- Rs.168,200]**

(01/2025 முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்)

வயது: 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## எவ்வாறு விண்ணப்பிப்பது:

சுயவிபரக் கோவை அல்லது உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் வேலை அனுபவத்துடன் தொடர்புபட்ட சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் தேவையான தகவல்களை வழங்கும் விண்ணப்பங்களுடன் தலைவர், இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கை சபை, இலக்கம் 114/9, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரி இடப்பட்டு 2026.05.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் SLCARP இற்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அரச துறை ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் விண்ணப்பதாரரை விடுவிப்பதை தெளிவாகக் குறிப்பிட்டு முறையான வழிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் தலைப்பை குறிப்பிடல் வேண்டும். மேலுள்ள தேவைகளை உறுதி செய்யாத விண்ணப்பங்கள், பூர்த்தியாகாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்குப் பின் பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்/ பணிப்பாளர்**
**இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கை சபை**
**இல. 114/9, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு 07**